2021 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

(Tab) *எடுத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு* sim card *வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–9–2021) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

25. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 24–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./புகொக/19–5–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 16–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மின்.வவி. தொ./7–43–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*27. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 18–9–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./*T.R*/5/2–12–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

28. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின்

பகிர்மான விதித்தொகுப்பு ஆகியவற்றுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 9–6–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./வவி/7–41 மற்றும் எண் த.மி.ஒ.ஆ./பவி/8–26–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

29. (i) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஒன்பதாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 31–7–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 120–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–III, பிரிவு 1(a)–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் SRO A–17(b)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் வெளியிட்டது குறித்து 31–7–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 122–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

30. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இந்திய அரசின் "அலுவல் ரீதியிலான நிலை வழங்கப்பட்ட இந்திய வானூர்தி நிறுவனங்களாக" அட்டவணையிடப்பட்ட (i) கிங்ஃபிஷர் வானூர்தி நிறுவனம் (ii) ஸ்பைஸ் ஜெட் வானூர்தி நிறுவனம் (iii) திருவாளர்கள் ஆர்யன் கார்கோ எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (iv) டெக்கான் 360 (டெக்கான் கார்கோ மற்றும் எக்ஸ்ப்ரெஸ் லாஜிஸ்டிக்ஸ் தனியார் நிறுவனம்) வானூர்தி நிறுவனம் (v) திருவாளர்கள் இண்டர் க்ளோப் ஏவியேஷன் லிமிடெட் நிறுவனம் மற்றும் (vi) இந்திய வானூர்தி நிறுவனம் ஆகியவற்றிற்கு பன்னாட்டு வானூர்தி சேவைகள் நோக்கத்திற்காக தாரை எரிபொருள் (jet fuel) உட்பட வானூர்தி விசையாழி எரிபொருள் விற்பனை செய்தது குறித்து 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) இரண்டாவது விவர அட்டவணையில், விளக்கம் III–ல் வரையறுக்கப்பட்டவாறான எண்ணெய் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து 9–11–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B2) துறையின் அரசாணை (நிலை) எண் 168–ல் வெளியிடப்பட்ட

அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

31. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பதிமூன்றாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 16–11–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 170–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. 13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h–5)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 9–3–2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 59–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

88. மானியக் கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

89. மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

90. மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

91. மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)